2005 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2005). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 5/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த பன்னிரண்டாவது நிதிக் குழு, நிதி வழங்கு கால அளவிற்கான கடன் நிவாரணத் திட்டத்தின் பயனைப் பெறும்பொருட்டு 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தினை திருத்துவதெனக் கருதப்பட்டுள்ளது என்று நோக்க, காரண விளக்க உரையை இந்தச் சட்டமுன்வடிவிலே கொடுத்திருக்கிறார்கள்.

@ 12-4-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இதனால் என்ன பயன் உண்மையிலேயே உருவாகிறது, எதற்காக இந்தச் சட்டம் வருகிறது என்பதைக் கொஞ்சம் தெளிவாக, ஏனென்றால் எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை, இதை உண்மையிலேயே செய்துதான் தீரவேண்டுமா என்பதை எல்லாம் கொஞ்சம் அவைக்கு விளக்கவேண்டும் என்று நான் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இதற்குக் கருத்து சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: யாரும் பேசவில்லையா? Is anybody else addressing?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. வேறு யாரும் இல்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரைக்கும் மைய அரசு Debt Relief Scheme ஒன்றை தற்போது அறிவித்திருப்பதை மாண்புமிகு அவையும், மாண்புமிகு உறுப்பினர்களும், அறிவார்கள். அதை நடைமுறைப்படுத்துகிறபோது எத்தகைய நிதி நிருவாகத்தை மாநிலம் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக fiscal responsibility legislation ஏற்கெனவே இருப்பதை, எத்தகைய ஓர் இலக்கை அரசு எய்த வேண்டும், நிர்வாகம் அடையவேண்டும் என்பதற்காக மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். இது கட்டாயமான ஒன்று. இப்படிப்பட்ட இலக்குகளை அடைய வேண்டும் என்பதுதான் amendment–லே கூறப்பட்டிருக்கிறது. அந்த இலக்குகளை எய்துவதற்கு இந்தச் சட்டத் திருத்தம் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.